க.பொ.த. (உ.தரம்) உதவிக் கருத்தரங்கு 2014

கணக்கீடு I

இரண்டு மணித்தியாலம்

கவனிக்கவும் :

* **எல்லா** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
* **1** தொடக்கம் **30** வரையிலான வினாக்களுக்குச் சரியான விடையினைத் தெரிவு செய்து **அதன் இலக்கத்தை வினாவிற்கு முன்னால் உள்ள புள்ளிக் கோட்டில் எழுதவும்.**
* இலக்கம் **31** தொடக்கம் **50** வரையிலான வினாக்களுக்குச் சுருக்கமான விடையினைக் குறித்த **புள்ளிக் கோட்டின் மீது எழுதவும்.**

01. வணிகமொன்றில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கலொன்றின் காரணமாக ஏற்பட்ட தாக்கமானது கணக்கீட்டுச் சமன்பாட்டினூடாக பின்வருமாறு வெளிப்படுத்தப்படுத்தப்பட்டுள்ளது.

சொத்துக்கள்	=	**பொறுப்புக்கள்**	+	**உரிமை**
- 45 000	=	**- 50 000**		**+ 5 000**

இதன்மூலம் வெளிக்காட்டப்படும் கொடுக்கல் வாங்கலாக இருப்பது

(1) கிரயம் ரூபா. 45 000 பெறுமதியான பொருட்கள் ரூபா. 50 000 த்திற்குக் கடனுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.
(2) ரூபா. 5 000 வட்டியுடன் வங்கிக்கடன் ரூபா. 50 000 செலுத்தப்பட்டுள்ளது.
(3) கடன்கொடுத்தோருக்குச் செலுத்த வேண்டிய ரூபா. 50 000 த்தை முழுமையாகக் கொடுத்துத் தீர்ப்பதற்காக ரூபா. 45 000 செலுத்தப்பட்டுள்ளது.
(4) ரூபா. 50 000 பெறுமதியான பொருட்கள் 10% பெறுமதி சேர்க்கப்பட்ட வரியுடன் (VAT) கடனுக்குக் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.
(5) ரூபா. 45 000 கிரயம் கொண்ட இயந்திரம் ரூபா. 50 000 த்திற்குக் கடனுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.
(........)

02. 2014/03/31 ஆந் திகதியில் முடிவடைந்த வருடத்தில் நட்டமாக ரூபா. 75 000 தைப் பெற்ற வணிகமொன்றிற்குரிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளது. இவ்வணிகம் 2013.04.01 இல் ஆரம்பிக்கப்பட்டது.

	ரூபா. '000
வருடத்திற்கான மொத்தப் பொறுப்புக்களின் அதிகரிப்பு	900
பற்று	50
மேலதிக மூலதனமிடல்	225

2014/03/31 ஆந் திகதியில் முடிவடைந்த வருடத்தின் சொத்துக்களின் **அதிகரிப்பு** அல்லது **குறைவின்** பெறுமதியைக் குறிப்பிடவும்.

(1) ரூபா. 825 000 த்தினால் அதிகரிப்பேற்பட்டுள்ளது. (2) ரூபா. 975 000 த்தினால் குறைவேற்பட்டுள்ளது.
(3) ரூபா. 975 000 த்தினால் அதிகரிப்பேற்பட்டுள்ளது. (4) ரூபா. 1 000 000 த்தினால் அதிகரிப்பேற்பட்டுள்ளது.
(5) ரூபா. 1 150 000 த்தினால் அதிகரிப்பேற்பட்டுள்ளது. (........)

03. கட்டடப் பராமரிப்பு, வருடத்திற்கான வருமான வரி, பற்று, ஐயக்கடன் ஏற்பாடு போன்ற ஒவ்வொரு கணக்கு வகைகளையும் ஒழுங்குமுறையாக வகைப்படுத்தும் பொழுது அவை எம்முறையில் அமையும்.

(1) செலவுகள், செலவுகள், உரிமை, சொத்துக்கள்
(2) செலவுகள், பொறுப்புக்கள், செலவுகள், வருமானங்கள்
(3) செலவுகள், வருமானங்கள், உரிமை, சொத்துக்கள்
(4) சொத்துக்கள், சொத்துக்கள், உரிமை, பொறுப்புக்கள்
(5) சொத்துக்கள், வருமானங்கள், உரிமை, சொத்துக்கள் என்றவாறாகும். (........)

04. ஜனவரி மாதத்தினுள் நிறுவனமொன்று ரூபா. 100 000 பெறுமதியான பொருட்களை கொள்வனவாளர் ஒருவருக்குப் பட்டியலிட்டுள்ளது. ஆயினும் கொள்வனவாளருக்கு ரூபா. 90 000 பெறுமதியான பொருட்கள் மட்டுமே அனுப்பப்பட்டுள்ளன எனப் பின்னர் தெரிய வந்தது. இந்நடவடிக்கைகளை நிறுவனத்தின் ஏடுகளில் பதிவு செய்யும் முறையாக அமைவது,

	வரவு	செலவு
(1)	உட்திரும்பல் கணக்கு	கடன்பட்டோர் கணக்கு
(2)	கடன்கொடுத்தோர் கணக்கு	வெளித்திரும்பல் கணக்கு
(3)	விற்பனைக் கணக்கு	வெளித்திரும்பல் கணக்கு
(4)	கடன்கொடுத்தோர் கணக்கு	கொள்வனவுக் கணக்கு
(5)	விற்பனைக் கணக்கு	கடன்பட்டோர் கணக்கு எனும் வகையிலாகும்

(........)

[பக். 2 ஐப் பார்க்க

05. பின்வரும் கூற்றுகளில் முற்பண முறைச் சில்லறைக் காசு தொடர்புடைய சரியான கூற்றைக் குறிப்பிடுக.

(1) சில்லறைக் காசுக் கொடுப்பனவு தொடர்பான மூல ஆவணமொன்றாக வரவுத் தாள் பயன்படுத்தப்படும்.

(2) சில்லறைக் காசேட்டு முற்பண முறையினை உள்ளகக் கட்டுப்பாட்டு முறை ஒன்றாகக் கருத முடியாது.

(3) ஒவ்வொரு மீள்நிரப்பல் கால இறுதியிலும் ஒரே அளவிலான காசுப் பெறுமதி மீள்நிரப்பல் செய்தல் வேண்டும்.

(4) ஒவ்வொரு மீள்நிரப்பல் கால இறுதியிலும் சில்லறைக் காசாளரிடம் மீதமுள்ள காசுப் பெறுமதிக்குச் சமமான தொகையினை மீள்நிரப்பல் செய்தல் வேண்டும்.

(5) மீள்நிரப்பல் கால இறுதியில் சில்லறைக் காசாளரிடம் எஞ்சியிருக்கும் பணத்தொகையும், அக்காலத்தினுள் செலவிடப்பட்ட தொகையினதும் மொத்தம் வசக்கட்டுத் தொகைக்குச் சமனாக இருக்கும். (........)

06. வணிகமொன்றின் ஊழியர்களின் மாதாந்த மொத்த சம்பளம் ரூபா. 400 000 ஆகும். ஊழியர் சேமலாப நிதிக்கு ஊழியர்கள், வேலை வழங்குநர்களின் பங்களிப்பு முறையே ரூபா. 60 000 மாகவும் ரூபா. 40 000 ஆகவும். காணப்பட்டது. சம்பளம் காசாக உரிய மாதத்தில் செலுத்தப்படுவதுடன் ஊழியர் சேமலாப நிதி ஊழியர் நம்பிக்கை நிதிப் பங்களிப்பானது எதிர்வரும் மாதத்திலே செலுத்தப்படுகிறது. இக்கொடுக்கல் வாங்கல்களின் விளைவானது கணக்கீட்டுச் சமன்பாட்டில் எம்முறையில் காட்டப்படும்.

	சொத்துக்கள் (ரூ)	=	பொறுப்புக்கள் (ரூ)	+ உரிமை (ரூ)
(1)	- 360 000	=	+ 40 000	- 400 000
(2)	- 360 000	=	+ 60 000	- 420 000
(3)	- 360 000	=	+ 100 000	- 460 000
(4)	- 400 000	=	+ 100 000	- 500 000
(5)	- 460 000	=	+ 40 000	- 500 000 எனவாகும்.

(........)

07. பின்வருவனவற்றில் சரியான கூற்று / கூற்றுக்கள் எது / எவை?

A - தொடர்ச்சியான நிலைப்புத்தன்மையற்ற வணிகங்களின் அனைத்துச் சொத்துக்களும் நடைமுறைச் சொத்துக்களாகக் கருதப்படும்.

B - பாதுகாப்பெண்ணக்கருவிற்கமைய காணியொன்றின் சந்தைப் பெறுமதியின் அதிகரிப்பினைக் கணக்குகளில் பதிவு செய்தல் வேண்டும்.

C - கொள்கைமாறா எண்ணகருவிற்கமைய வணிகம் தெரிவு செய்த கணக்கீட்டுக் கொள்கைகளைத் தொடர்ந்தும் பயன்படுத்துதல் வேண்டும்.

(1) A மட்டும் (2) B மட்டும் (3) C மட்டும்
(4) A, B ஆகியன மட்டும் (5) A, C ஆகியன மட்டும் (........)

08. பின்வருவன பொறுப்பொன்றினை நிதிக்கூற்றுகளில் இனம் காண்பதற்குரிய நியதிகளாகும்.

A - பொறுப்பொன்றினது வரைவிலக்கணத்துக்கு ஏற்புடையதாக இருத்தல்.

B - உருப்படியுடன் இணைந்த எதிர்கால பொருளாதார நலன்கள். நிறுவனத்திலிருந்து வெளியேறக்கூடிய திறன் காணப்படல்.

C - நம்பகத்தன்மையுடன் அளவிடக்கூடிய கிரயமொன்று அல்லது பெறுமதியொன்று உருப்படிக்கிருத்தல்.

நிதிக்கணக்கீட்டின் எண்ணக்கரு ரீதியான சட்டகத்திற்கமைய சரியான நியதிகளாக அமைவது.

(1) A மாத்திரமாகும். (2) A யும் B யுமாகும். (3) A யும் C யுமாகும்.
(4) B யும் C யுமாகும். (5) A, B, C ஆகிய அனைத்துமாகும். (........)

09. வணிகமொன்றின் 2013.03.31 இல் முடிவடையும் வருடத்தில் இறுதி இருப்புத் தொகையானது ரூபா. 30 000 த்தினால் அதிகமாகவும், 2014.03.31 இல் முடிவடையும் வருடத்தின் இறுதி இருப்புத் தொகை ரூபா. 10 000 த்தினால் குறைவாகவும் கணிக்கப்பட்டிருந்தது. இதனால் மேற்குறிப்பிட்ட இரு வருடங்களிலும் இலாபத்தில் ஏற்படும் தாக்கம் என்ன?

	2013.03.31 இல் முடிவடைந்த வருடத்தில்	2014.03.31 இல் முடிவடைந்த வருடத்தில்
(1)	ரூபா. 30 000 த்தினால் அதிகரிக்கும்	ரூபா. 10 000த்தினால் குறைவடையும்
(2)	ரூபா. 30 000 த்தினால் குறைவடையும்	ரூபா. 10 000த்தினால் அதிகரிக்கும்
(3)	ரூபா. 30 000 த்தினால் அதிகரிக்கும்	ரூபா. 20 000த்தினால் குறைவடையும்
(4)	ரூபா. 30 000 த்தினால் அதிகரிக்கும்	ரூபா. 40 000த்தினால் குறைவடையும்
(5)	ரூபா. 30 000 த்தினால் குறைவடையும்	ரூபா. 40 000த்தினால் அதிகரிக்கும்

(........)

[பக். 3 ஐப் பார்க்க

10. வணிகமொன்று 2014.03.31 இல் ரூபா. 70 000 கிரயமுள்ள உபகரணமொன்றை வழங்கி, ரூபா. 100 000 பெறுமதியான புதிய உபகரணமொன்றை அன்றே பெற்றுக்கொண்டது. இதற்காக பழைய உபகரணத்துடன் ரூபா. 40 000 காசும் செலுத்தப்பட்டது. இவ் உபகரண வழங்கலினால் பெறப்பட்ட இலபாம் அல்லது நட்டம் எவ்வளவு?

(1) இலாபம் ரூபா.10 000 (2) நட்டம் ரூபா.10 000 (3) இலாபம் ரூபா.30 000
(4) நட்டம் ரூபா. 30 000 (5) நட்டம் ரூபா.50 000 (........)

11. "இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இல் ஆதன பொறி உபகரணத்திற்கான'' வரைவிலக்கணங்களில் சில வருமாறு.

A - திரண்ட பெறுமானத் தேய்வு ஏற்பாட்டினைக் கழித்த பின்னர் நிதிநிலமைக் கூற்றுகளில் காட்டப்படும் சொத்தொன்றின் பெறுமதியாகும்.

B - அறிவு, விருப்பம் என்பவற்றுடன் பிரிவினர்களுக்கிடையே கைக்கெட்டிய தூரத்தில் இடம் பெறும் கொடுக்கல் வாங்கலொன்றின் போது சொத்தொன்று பரிமாற்றம் செய்யப்படும் பெறுமதி

C - சொத்தொன்றின் கிரயம் அல்லது அதன் மீள்மதிப்பீட்டுப் பெறுமானத்திலிருந்து இழிவுப் பெறுமானத்தைக் கழித்த பின்னர் கிடைக்கும் பெறுமானம்

மேற்காட்டிய வரைவிலக்கணங்களில் சொத்தொன்றின் **நியாயமான பெறுமதி, தேறிய பெறுமதி, தேய்விடக் கூடிய பெறுமதி** என்பவற்றை ஒழுங்கு முறையாகக் காட்டும் போது அது அமையும் முறை

(1) A, B, C (2) A, C, B (3) B, A , C
(4) B, C, A (5) C, A, B (........)

- **வினா இலக்கம்** 12, 13, 14 **என்பவற்றுக்கு விடையளிக்க பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

2014.03.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான பாசித், அல்பரட், ருக்ஸான் பங்குடமை வணிகத்தின் தகவல்களில் சில வருமாறு

A - அல்பரட்டின் பங்குடமைச் சம்பளம் வருடாந்தம் ரூபா. 24 000

B - மேற்குறிப்பிட்ட சம்பளத்தில் ரூபா. 12 000 குறித்த வருடத்தில் செலுத்தப்பட்டுள்ளது.

C - பாசித், அல்பரட், ருக்ஸான் என்பவர்களுக்கிடையே பகிர்ந்து கொள்ளப்பட்ட இறுதிப் பங்கிலாபம் முறையே ரூபா. 40 000, ரூபா. 30 000, ரூபா. 20 000 ஆகும்.

D - ருக்ஸான் செலுத்த வேண்டிய கடனுக்கான வட்டி ரூபா. 3 000 திற்கு எவ்வித பதிவுகளும் செய்யப்படவில்லை.

E - பாசித், ருக்ஸான் என்போர்களின் பொருள் பற்று முறையே ரூபா. 3 000, ரூபா. 2 000 ஆக இருந்ததுடன் இது தொடர்பில் எவ்விதப் பதிவும் செய்யப்படவில்லை.

12. மேற்காட்டிய உருப்படிகளில் எவ்வுருப்படிகள் பங்காளர்களிடையே மேற்கொள்ளப்படுகின்ற இலாப நட்டப் பகிர்வாகக் கருதப்படும்.

(1) A, B ஆகும். (2) A, C ஆகும். (3) A, B, C ஆகும்.
(4) A, B, C, D ஆகும். (5) A, B, C, D, E ஆகும். (........)

13. 2014.03.31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்தில் சரியான இலாபமாக அமைவது

(1) ரூபா. 90 000 ஆகும். (2) ரூபா. 102 000 ஆகும். (3) ரூபா. 106 000 ஆகும்.
(4) ரூபா. 114 000 ஆகும். (5) ரூபா. 116 000 ஆகும். (........)

14. மேற்காட்டிய சகல தகவல்களையும் கவனத்திற் கொண்ட பின்னர் 2014.03.31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்தில் பங்குடமை வணிகத்தின் உரிமையில் ஏற்பட்ட அதிகரிப்புத் தொகையாக இருப்பது

(1) ரூபா. 94 000 (2) ரூபா. 97 000 (3) ரூபா. 100 000
(4) ரூபா. 104 000 (5) ரூபா. 116 000 (........)

15. வணிக நிறுவனமொன்று குறிப்பிட்ட நிதியாண்டொன்றினுள் ரூபா. 20 000 த்திற்குப் பொதியிடல் பொருட்களை கொள்வனவு செய்துள்ளது. இவற்றுள் ரூபா. 4 000 பெறுமதியான பொதியிடல் பொருட்கள் அக்குறிப்பிட்ட வருடத்தினுள் அழிவுற்றதுடன் ரூபா. 9 000 பெறுமதியான இருப்புக்கள் பயன்பாட்டிற்கெடுத்துக் கொள்ளப்பட்டன. மேற்காட்டிய நிகழ்வுகளின் காரணமாக அந்நிதியாண்டின் செலவில் ஏற்பட்ட அதிகரிப்பாக அமைவது,

(1) ரூபா. 4 000 (2) ரூபா. 7 000 (3) ரூபா. 9 000
(4) ரூபா. 13 000 (5) ரூபா. 20 000 (........)

[பக். 4 ஐப் பார்க்க

- **வினா இலக்கம் 16, 17 இற்கு விடையளிப்பதற்குப் பினவரும் தகவல்களைப் பயன்படுத்தவும்.**

பொருள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள நயனாக் கம்பனியின் கொடுக்கல் வாங்கல்களுட் சில வருமாறு

A - வணிகத்தின் உற்பத்தி நடவடிக்கைகளுக்காக உடன் காசுக்கு இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்படல்.

B - மூன்று மாத காலமுதிர்வினைக் கொண்ட ரூபா. 50 000 திறைசேரி உண்டியல்கள் கொள்வனவு செய்யப்படல்

C - நிதிக்குத்தகையின் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனத்திற்கான தவணைக் கட்டணத்தைச் செலுத்துதல்

D - ஒவ்வொன்றும் ரூபா. 50 பெறுமதி கொண்ட 10 000 சாதாரண பங்குகளைத் தற்போதுள்ள பங்காளர்களுக்கு ஒதுக்கத்தைப் பயன்படுத்தி வழங்குதல்

16. மேற்காட்டிய நடவடிக்கைகளில் எக்கொடுக்கல் வாங்கல்களினூடகக் காசுப் பாய்ச்சல் இடம்பெறுகிறது,

(1) A, B மட்டும் (2) A, C மட்டும் (3) A, B, C மட்டும்
(4) B, D மட்டும் (5) B, C, D மட்டும் (........)

17. மேற்காட்டிய எக்கொடுக்கல் வாங்கல்களினூடாக நிதிச்செயற்பாட்டிற்குரிய காசுப்பாய்ச்சல் உருவாகின்றது.

(1) B மட்டும் (2) C மட்டும் (3) B, C மட்டும்
(4) B, D மட்டும் (5) C, D மட்டும் (........)

18. ரவி வணிகத்தின் பின்வரும் தகவல்கள் உங்களுக்குத் தரப்படுகின்றது.

	2014 .03.31	**2013.03.31**
இருப்பு	300 000	200 000
கடன்பட்டோர்	180 000	140 000

2014.03.31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்தில் கடன்பட்டோர்களிடமிருந்து ரூபா. 920 000 கிடைக்கப்பெற்றதுடன் காசுக்கு விற்பனை ரூபா. 790 000 ஆக இருந்தது.
வணிகமானது கிரயத்தில் 40% இலாபம் வைத்து விற்பனை செய்கின்றது. வணிகத்தின் 2014.03.31 ஆம் திகதியுடன் முடிவடையும் வருடத்தில் கொள்வனவு எவ்வளவு ?

(1) ரூபா.1 134 000 (2) ரூபா.1 150 000 (3) ரூபா.1 350 000
(4) ரூபா.1 550 000 (5) ரூபா.1 564 000 (........)

- **வினா இலக்கம்** 19, 20, 21 **ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தவும்.**

வரையறுத்த துஷ்யந்தன் கம்பனிக்குரிய தகவல்களுட் சில கீழே தரப்பட்டுள்ளன.

	2014.03.31 (ரூபா.'000)	**2013.03.31 (ரூபா.'000)**
கூறப்பட்ட மூலதனம்		
பங்கொன்று ரூபா.200/- பெறுமதியான சாதாரண பங்குகள்	13 000	13 000
பங்கொன்று ரூபா.5/- பங்கிலாபம் உரித்துடைய மீட்கத்தகாத முன்னுரிமைப் பங்குகள் (200 000)	4 000	4 000
ஒதுக்கங்கள்		
பொது ஒதுக்கம்	3 400	3 000
நிறுத்தி வைத்த உழைப்புக்கள்	3 600	2 000
நடைமுறைஅல்லாத பொறுப்புக்கள்		
15% நீண்டகாலக் கடன்	2 000	2 000
நடைமுறைப் பொறுப்புக்கள்		
செலுத்த வேண்டிய வருமான வரி	100	80
கடன் கொடுத்தோர்	140	150

2014.03.31 இல் முடிவடையும் வருடத்தில் செலுத்திய வருமான வரி ரூபா. 280 000 ஆகும்.

19. 2014.03.31 ல் முடிவடைந்த வருடத்தில் வரிக்கு முன்னரான இலாபம்,

(1) ரூபா. 1 600 000 (2) ரூபா. 2 400 000 (3) ரூபா. 2 700 000
(4) ரூபா. 3 000 000 (5) ரூபா. 3 300 000 (........)

20. 2014.03.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான வட்டிக் காப்பு விகிதம்,

(1) 08 முறை (2) 09 முறை (3) 10 முறை
(4) 11 முறை (5) 12 முறை (........)

[பக். 5 ஐப் பார்க்க

21. 2014.03.31 இல் முடிவடைந்த வருடத்தில் உரிமையின் மீதான விளைவு வீதம் (இறுதி உரிமையின் அடிப்படையில்)
(1) 10.0% (2) 12.5% (3) 13.7%
(4) 15.0% (5) 16.5% (........)

- **வினா இலக்கம் 22, 23 விடையளிப்பதற்கு பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தவும்.**

"மினா" வாசிகசாலை சங்கத்தின் 2013.03.31 இன் ஆயுள் அங்கத்துவச் சந்தாக் கணக்கு மீதி ரூபா. 150 000 ஆகும். இதில் 10% ம் வருடாந்த அங்கத்தவர் சந்தாக் கட்டணமாக வருமானத்துடன் சேர்க்கப்படும். வருட அங்கத்துவக் கட்டணம் ரூபா.500 ஆக இருப்பதுடன் 2014.03.31 இல் ஆயுள் அங்கத்தவர் தவிர்ந்த அங்கத்தவர் எண்ணிக்கை 200 ஆகும். 2013.03.31 ல் அங்கத்துவக் கட்டணம் செலுத்தாத அங்கத்தவர்கள் 20 பேரும் எதிர்வரும் வருடத்திற்கான அங்கத்துவக் கட்டணத்தைச் செலுத்திய அங்கத்தவர்கள் 25 பேரும் இருந்தனர். 2014.03.31 இல் அங்கத்துவக் கட்டணம் செலுத்தாத அங்கத்தவர்கள் 30 பேரும், எதிர்வரும் வருடத்திற்காக அங்கத்துவக் கட்டணம் செலுத்திய அங்கத்தவர்கள் 20 பேரும் இருந்தனர்.

22. 2014.03.31இல் முடிவடைந்த வருடத்திற்கான அங்கத்துவக் கட்டண வருமானம்.
(1) ரூபா.67 500 (2) ரூபா.90 000 (3) ரூபா.102 500
(4) ரூபா.115 000 (5) ரூபா.150 000 (........)

23. 2014.03.31 இல் முடிவடைந்த வருடத்திற்கு காசாகப் பெற்ற அங்கத்துவக் கட்டணத் தொகை
(1) ரூபா. 52 500 (2) ரூபா. 75 000 (3) ரூபா. 87 500
(4) ரூபா. 92 500 (5) ரூபா. 100 000 (........)

- **வினா இலக்கம் 24, 25 விடையளிப்பதற்கு பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தவும்.**

வணிகமொன்றின் 2014 மார்ச் மாதத்தின் சம்பளம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு

விபரம்	ரூபா.	
அடிப்படைச் சம்பளம்	ரூபா. 75 000	
இடைக்காலக் கொடுப்பனவு	ரூபா.3 000	
கொடுப்பனவுகள்	ரூபா. 15 000	
	ரூபா.93 000	
கழிப்பனவுகள் :		
பண்டிகை முற்பணம்	ரூபா. 3 000	
சம்பள முற்பணம்	ரூபா. 7 500	
ஊழியர் சேமலாப நிதி - (EPF)	தொழில் கொள்வோர்	8%
	தொழில் வழங்குநர்	12%
தொழில் வழங்குநரின் ஊழியர் நம்பிக்கை நிதிப் பங்களிப்பு (ETF)		3%

(EPF, ETF ஐக் கணிக்கும் போது இடைக்காலக் கொடுப்பனவு கருத்திற் கொள்ளப்படமாட்டாது.)

24. 2014 மார்ச் மாதத்தின் ஊழியர்கள் தொடர்பான மொத்தச் செலவு
(1) ரூபா.90 000 (2) ரூபா.93 000 (3) ரூபா.106 500
(4) ரூபா.106 950 (5) ரூபா.113 700 (........)

25. பின்வரும் எவ்வட்டவணையானது மார்ச் மாதத்தின் ஊழியர் நம்பிக்கை நிதிப் பங்களிப்பு தொடர்பிலான **சரியான** விடையினைக் கொண்டுள்ளது?

	ஊ. சேமலாப நிதிச் செலவுக் கணக்கு (வரவு ரூபா.)	**சம்பளக் கணக்கு (வரவு ரூபா.)**	**செலுத்த வேண்டிய ஊ. சே. நிதி (செலவு ரூபா.)**
(1)	9 000	6 000	15 000
(2)	10 800	7 200	18 000
(3)	11 160	7 440	18 600
(4)	18 000	-	18 000
(5)	18 600	-	18 600

(........)

26. உற்பத்திப் பொருளொன்றிற்கான தகவல்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

நிலையான பொது மேந்தலைக்கிரயம்	ரூபா. 400 000
பாதுகாப்பு எல்லை	ரூபா. 200 000
பங்களிப்பு விற்பனை வீதம்	ரூபா. 60%

உற்பத்திப் பொருளுக்கான மொத்தப் பங்களிப்பு எவ்வளவு?
(1) ரூபா.200 000 (2) ரூபா.240 000 (3) ரூபா.360 000
(4) ரூபா.520 000 (5) ரூபா.600 000 (........)

[பக். 6 ஐப் பார்க்க

- **வினா இலக்கம் 27, 28 விடையளிப்பதற்கு பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தவும்.**

வரையறுக்கப்பட்ட சஜி கம்பனியானது பழைய இயந்திரத்திற்குப் பதிலாக புதிய இயந்திரமொன்றில் தனது பணத்தினை முதலீடு செய்வற்கு எண்ணுகின்றது. மதிப்பிடப்பட்ட தகவல்கள் பின்வருமாறு காணப்பட்டது.

	(ரூபா)
புதிய இயந்திரத்தின் கொள்வனவு விலை	200 000
பொருத்துதல் கிரயம்	25 000
பழைய இயந்திரத்தின் கிரயம்	100 000
பழைய இயந்திரத்தை விற்பனை செய்யக்கூடிய விலை	50 000
ஆரம்பத் தொழிற்படு மூலதனம்	35 000

புதிய இயந்திரத்தின் பயன்படு ஆயுட்காலம் 05 வருடங்களாகும். தேறிய காசுப்பாய்ச்சல் பின்வருமாறு.

வருடம்	1	2	3	4	5
தேறிய காசுப் பாய்ச்சல் (ரூபா.)	80 000	60 000	50 000	40 000	60 000

27. இயந்திரம் தொடர்பில் ஆரம்ப முதலீடு,
(1) ரூபா. 160 000 ஆகும். (2) ரூபா. 200 000 ஆகும். (3) ரூபா. 210 000 ஆகும்.
(4) ரூபா. 250 000 ஆகும். (5) ரூபா. 275 000 ஆகும். (........)

28. முதலீட்டினை மீளப்பெறும் காலம் எவ்வளவு?
(1) 04 வருடங்கள். (2) 03 வருடங்களும் 06 மாதங்கள். (3) 03 வருடங்களும் 09 மாதங்கள்.
(4) 05 வருடங்கள் (5) 04 வருடங்களும் 06 மாதங்கள். (........)

- **வினா இலக்கம் 29, 30 விடையளிப்பதற்கு பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தவும்.**

பண்ட அலகொன்றை உற்பத்தி செய்யும்போது நேர் பொருட்களுக்காக ரூபா. 300 உம் நேர் கூலிக்காக ரூபா.200 உம் செலவிடப்படுகின்றது. தொழிற்சாலையானது உற்பத்தித் திணைக்களங்கள் 02 ஐயும் ஒரு சேவைத் திணைக்களத்தையும் கொண்டுள்ளது. இத்திணைக்களங்களின் ஒரு வருடத்திற்கான தகவல்கள் பின்வருமாறு.

திணைக்களம்	**நேரில் கூலி**	**நேரில் மூலப் பொருள்**	**இடத்தின் அளவு சதுர மீற்றரில்**	**ஊழியர் எண்ணிக்கை**	**நேர்கூலி மணித்தி யாலத்தில்**	**அலகொன்று உற்பத்தி செய்ய எடுக்கும் நேரம் மணித்தி யாலத்தில்**	**களஞ்சிய வேண்டுகோள் பத்திர எண்ணிக்ககை**
உற்பத்தித் திணைக்களம் 01	80 000	75 000	15 000	5	1 330	01	2 000
உற்பத்தித் திணைக்களம் 02	60 000	75 000	10 000	3	916	02	3 000
சேவை (களஞ்சியசாலை)	15 000	20 000	5 000	2	-	-	-

அத்துடன் இக்காலத்திற்குரிய பின்வரும் செலவுகள் தொடர்பான தகவல்களும் வழங்கப்பட்டுள்ளன.
தொழிற்சாலை வாடகை ரூபா. 120 000
ஊழியர் நலனோன்பலிற்கான செலவுகள் ரூபா. 50 000
நேர்கூலி மணித்தியாலத்தின் அடிப்படையில் பொது மேந்தலைக் கிரயம் உறிஞ்சுதலுக்குட்படுத்தப்படும்.

29. உற்பத்தித் திணைக்களங்கள் 01, 02 என்பவற்றிற்குப் பகிரப்பட்ட மொத்த மேந்தலைக் கிரயங்கள் முறையே,
(1) ரூபா. 169 000 மும் ரூபா. 156 000 மாகும்.
(2) ரூபா. 237 000 மும் ரூபா. 208 000 மாகும்.
(3) ரூபா. 240 000 மும் ரூபா. 190 000 மாகும்.
(4) ரூபா. 266 000 மும் ரூபா. 229 000 மாகும்.
(5) ரூபா. 272 500 மும் ரூபா. 222 500 மாகும். (........)

30. இவ்வுற்பத்திப் பொருளின் அலகுக் கிரயம் எவ்வளவு?
(1) ரூபா. 500 (2) ரூபா. 790 (3) ரூபா. 825
(4) ரூபா. 950 (5) ரூபா. 1 200 (........)

[பக். 7 ஐப் பார்க்க

31. பின்வரும் கூற்றுக்கள் உண்மையானது அல்லது பொய்யானது என்பதை குறித்த புள்ளிக்கோட்டில் ''√'' எனும் அடையாளத்தில் காட்டுங்கள்.

	உண்மை	பொய்
A - நிறுவனமொன்றின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விரிவான பகுப்பாய்வொன்றை அதன் முகாமையாளருக்கு வழங்குவதே கணக்கீட்டின் அடிப்படை நோக்கமாக இருக்கின்றது.	....	....
B - கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்யும்போது இடம்பெறும் சகல வழுக்களையும் பரீட்சை மீதியினூடாக அறிந்துகொள்ள முடியும்.	....	....
C - பண அளவீட்டு எண்ணக்கருவிற்கமைய பணத்தின் பெறுமதியானது நிலையானது எனக் கருதப்படும்.	....	....
D - பண்டமொன்றைக் கொள்வனவு செய்யும் போது குறிக்கப்பட்ட விலையிலிருந்து கழிக்கப்படுகின்ற கழிவானது பெற்ற கழிவுக் கணக்கில் செலவு வைக்கப்படும்.	....	....

32. வணிக நிறுவனமொன்றில் பின்வரும் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்வதற்குரிய முதன்மை ஏட்டினையும் அதனுடன் தொடர்புடைய ஆவணத்தினையும் குறிப்பிட்டுக் காட்டவும்.

கொடுக்கல் வாங்கல்கள்	முதன்மை ஏடு	மூல ஆவணம்
(1) மீன் விற்பனைக்காகக் கடனுக்குப் பொருள் கொள்வனவு செய்தல்	....	....
(2) வணிகத்தின் பயன்பாட்டிற்காக மோட்டார் வாகனமொன்றை கடனுக்குக் கொள்வனவு செய்தல்.	....	....

33. பின்வரும் கொடுக்கல் வாங்கல்களினூடாக வங்கிமீதியில் அதிகரிப்பு அல்லது குறைவு ஏற்படுகின்றதா என்பதனைக் குறிப்பிட்டுக் காட்டவும்.

கொடுக்கல் வாங்கல்கள்	வணிகத்தின் வங்கிக் கணக்கு மீதி
(1) கடன்பட்டோர் ஒருவர் வணிகத்தின் வங்கியிலுள்ள நடைமுறைக் கணக்கில் காசோலை ஒன்றை வைப்பிலிடுதல்	....
(2) வங்கியானது காசோலைப் புத்தகக் கட்டணத்தை அறவிடல்	....
(3) வணிகத்தின் மின்சாரக் கட்டணமானது காசோலை மூலம் செலுத்தப்படல்	....
(4) வங்கியில் வைப்பிலிடப்பட்ட காசோலையொன்று மறுக்கப்படல்.	....

34. ரூபா. 13 000 கொண்ட கொள்வனவுப் பட்டியலொன்று கொள்வனவு நாளேட்டில் ரூபா. 31 000 எனப் பதிவுசெய்யப்பட்டு பொதுப் பேரேட்டிலும் பிரதிசெய்யப்பட்டுள்ளது.

(அ) மேற்காட்டிய வழுவினைத் திருத்துவதற்கான குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும். (விளம்பல் அவசியமற்றது.)

....

....

(ஆ) இவ்வழுவின் காரணமாக இலாபத்தில் ஏற்படும் தாக்கம் எவ்வளவு என்பதனைத் தீர்மானித்து அது அதிகரிப்பொன்றா அல்லது குறைவொன்றா அல்லது மாற்றமில்லையா என்பதனைக் குறிப்பிட்டுக் காட்டவும்.

....

....

35. நிதிக் கணக்கீட்டிற்கும் முகாமைக் கணக்கீட்டிற்கும் இடையிலான இரண்டு வேறுபாடுகளைக் குறிப்பிடுக.

(1) ....

(2) ....

[பக். 8 ஐப் பார்க்க

36. வணிகமொன்று குறித்த நிதியாண்டொன்றில் கொள்வனவு செய்த இருப்புக்கள் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு

	ரூபா. '000
பட்டியல் படுத்தப்பட்ட விலை ரூபா. (6 000 வீதம 1 000 அலகுகள்)	6 000
வியாபாரக் கழிவுகள்	300
உட்சுமைக் கூலி	100
விநியோகச் செலவுகள்	600

வருட இறுதியில் காணப்பட்ட இருப்பு 100 அலகுகளாகும்.

வருட இறுதியில் காணப்படும் இருப்பின் கிரயத்தைக் கணிப்பிடுக.

....

37. 2014.03.31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்தின் உற்பத்தி வணிகமொன்றின் தகவல்கள் பின்வருமாறு.

	ரூபா. '000
மூலப்பொருட் கொள்வனவுகள்	1 500
நேர் உற்பத்திக் கூலி	800
உற்பத்திப் பொது மேந்தலைக் கிரயம்	1 100
மூலப்பொருள் இருப்பின் குறைவு	200
மூலக்கிரயத்தில் கணிக்கப்பட்ட நடைமுறை வேளை இருப்பின் அதிகரிப்பு	150

பின்வருவனவற்றைக் கணிப்பிடவும்.

(i) மூலக் கிரயம் (ரூபா.)

....

(ii) மொத்த உற்பத்திக் கிரயம் (ரூபா.)

....

38. வணிகமொன்றின் 2014.03.31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்தில் கடன்பட்டோர் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளது.

	ரூபா.
2013.04.01 ஆந் திகதியில் கடன்பட்டோர் மீதி	120 000
2014.03.31 ஆந் திகதியில் கடன்பட்டோர் மீதி	180 000
வருடத்தினுள் பதிவழிக்கப்பட்ட அறவிடமுடியாக் கடன்	4 800
பதிவழிக்கப்பட்ட அறவிடமுடியாக் கடன் மீளக் கிடைக்கப் பெற்றது	6 000

ஒவ்வொரு வருடத்திலும் இறுதிக் கடன்பட்டோர் மீதியின் அடிப்படையில் 4% ம் ஐயக் கடன் ஏற்பாடு செய்யப்படும்.

(i) 2014.03.31 ஆந் திகதியில் முடிவடைந்த வருடத்தின் வருமானக் கூற்றில் காட்ட வேண்டிய அறவிடமுடியாக் கடனையும் ஐயக் கடன் பெறுமானத்தையும் கணிப்பிடுக.

....

(ii) 2014.03.31ஆந் திகதியில் கடன்பட்டோரின் தேறிய பெறுமானத்தில் எவ்வளவு **அதிகரிப்பு** அல்லது **குறைவு** ஏற்பட்டுள்ளது?

....

39. இலாபநட்டங்களை சமமாகப் பகிர்ந்து கொள்ளும் ஒப்பந்தத்தினடிப்படையில் குமார், ரிழ்வான் என்போர் நடாத்திச் சென்ற பங்குடமை வணிகத்தில் 2013.04.01 ஆந் திகதியில் நளீன் என்பவர் புதிய பங்காளராக இணைத்துக் கொள்ளப்பட்டார். அன்றைய தினத்திலிருந்து குமார், ரிழ்வான, நளீன் ஆகியோர் 3 : 2 :1 எனும் விகிதத்தின் அடிப்படையில் இலாபநட்டங்களைப் பகிர்ந்து கொள்வதற்கு உடன்பட்டனர். அத்தினத்தில் பங்குடமை வணிகத்தின் நன்மதிப்பை சீராக்கியதன் பின்னர் நளீனின் மூலதனம் ரூபா. 50 000 த்தால் குறைவடைந்ததுடன் ரிழ்வானின் மூலதனம் ரூபா. 50 000 த்தால் அதிகரித்தது.

2013.04.01 இல் பங்குடமையின் நன்மதிப்பு எவ்வளவு?

....

[பக். 9 ஐப் பார்க்க

40. 1890 ஆம் ஆண்டுப் பங்குடமைக் கட்டளைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டு விதிமுறைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A - இலாபநட்டம் சமமாகப் பகிரப்படுதல் வேண்டும்

B - மூலதனத்துக்கு வட்டி வழங்கப்படுவதில்லை

C - பங்காளரொருவர் இளைப்பாறும் போது அல்லது இறக்கும்போது அவரது / அவளது உரிமையை கடன் கணக்கிற்கு மாற்றினால் அதற்கு வருடாந்தம் 5% வட்டி வழங்கப்படல் வேண்டும்.

D - மூலதனத்திற்கு மேலதிகமாக பங்காளர் வழங்கியுள்ள கடன்களுக்கு 5% வட்டிபெற உரித்துடையவராவார்.

மேற்குறிப்பிட்ட தகவல்களின் அடிப்படையில் பின்வரும் அட்டவணையைப் பூரணப்படுத்தவும்.

	விதிமுறை / விதிமுறைகள் (எழுத்தினை மாத்திரம் குறிப்பிடவும்)
(i) பங்குடமை வணிகமொன்றின் இலாபத்தினைப் பகிர்தல்	....
(ii) 24 ஆம் பிரிவு	....
(iii) 42 ஆம் பிரிவு	....

41. வணிகமொன்றின் இருப்புக் கொள்வனவு, வழங்கல் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

2014.01.01	- மீதி	- அலகொன்று ரூபா. 500 வீதம் 100 அலகுகள்
2014.01.15	- இருப்புப் கொள்வனவு	- அலகொன்று ரூபா. 550 வீதம் 400 அலகுகள்
2014.01.30	- விற்பனைக்கான விநியோகம்	- 300 அலகுகள்

வணிகம் இருப்பினை விலை இடுவது நிறையிடப்பட்ட சராசரி விலையிடல் முறையிலாக இருப்பின்

(i) 2014 ஜனவரி மாதத்திற்கான விற்பனைக் கிரயம் எவ்வளவு?

....

(ii) வணிகம் இருப்பினை விநியோகிக்கும் போது முதல் உள், முதல் வெளி (F.I.F.O.) முறையில் விலையிடுமாயின் 2014.01.31 இல் இருப்பின் கிரயம் எவ்வளவு?

....

42. நிதிக்கூற்றினுள் ஒதுக்கங்களை இனங்காண்பதற்கு முழுமையாக இருக்க வேண்டிய நியதிகள் **இரண்டினைக்** குறிப்பிடவும்.

(1) ....

(2) ....

43. 2014.03.31 இல் முடிவடையும் வருடத்திற்கான காஞ்சனா கம்பனியின் தகவல்கள் பின்வருமாறு

	ரூபா. '000
குறித்த நிதியாண்டிற்கான இலாபம்	5 200
மோட்டார் வாகன விற்பனை இலாபம்	200
செலுத்திய வருமான வரி	300
ஆதன உபகரணத் தேய்வு	100
இருப்பதிகரிப்பு	20
வருடத்திற்கான வருமான வரி ஏற்பாடு	360

கம்பனியின் செயற்பாட்டுச் செயன்முறைகளினூடாக உருவான தேறிய காசுப்பாய்ச்சல் எவ்வளவு?

....

....

....

....

• **வினா இலக்கம் 44, 45 விடையளிப்பதற்கு பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தவும்.**

44. வரையறுக்கப்பட்ட பிரபா கம்பனியின் 2014.03.31ல் முடிவடையும் வருடத்திற்கான உரிமை மாற்றல் கூற்றிலிருந்து பெயர்த்தெடுக்கப்பட்ட உருப்படிகள் பின்வருமாறு

கொடுக்கல் வாங்கல்	**சாதாரண பங்குகள் ரூபா. '000**	**மீட்கத்தகாத மு.பங்குகள் ரூபா. '000**	**பொது ஒதுக்கம் ரூபா. '000**	**மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் ரூபா. '000**	**நிறுத்தி வைத்த இலபாம் ரூபா. '000**
மீதி	2 500	1 000	-	500	600
A	-	-	500	-	(500)
B	500	-	(300)	-	(200)
C	500	-	-	-	-
D	-	-	-	300	500

மேற்குறித்த A, B, C, D யினால் காட்டப்படும் தகவல்களைக் குறிப்பிடுக.

(1) A :- ....

(2) B :- ....

(3) C :- ....

(4) D :- ....

45. மேற்குறிப்பிட்ட தகவல்களின் துணை கொண்டு நிதிச்செயற்பாட்டினூடாக உருவான காசுப்பாய்ச்சலைக் காட்டும் கொடுக்கல் வாங்கல் எது?

....

....

46. நிஹால் வணிகம் சுத்தம் செய்யும் நடவடிக்கைகளுக்காகக் கொள்வனவு செய்த பொருட்களின் இருப்புக்களி பெறுமதி ரூபா. 165 000 மாகும். அதில் ரூபா. 120 000 பெறுமதியான இருப்புக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் ரூபா. 20 000 பெறுமதியான இருப்புக்கள் அழிவடைந்துள்ளன. அழிவடைந்த இருப்பின் 75% ம் காப்புறுதி பெறும் உரித்துடையது. இருப்புத் தொடர்பிலான கொடுக்கல் வாங்கல் காரணமாக வணிகத்தின் இலாபத்தில் ஏற்பட்ட தாக்கம் எவ்வளவு?

....

....

47. சரக்கிருப்புக் கட்டுப்பாட்டு முறையின் போது பயன்படுத்தப்படும் பின்வரும் ஆவணங்கள் மூலம் நிறைவேற்றப்படும் கருமங்களைக் குறிப்பிடுக.

ஆவணம்	**கருமங்கள்**
(1) பொருள் வேண்டுகோள் பத்திரம்	....
(2) விலை விசாரணை	....
(3) பத்தாய அட்டை Bin Card	....
(4) களஞ்சியப் பேரேடு	....

48. x எனும் உருப்படிக்கு வருடாந்தம் ரூபா. 250, 000 அலகுகளுக்கான கேள்வி காணப்படுகின்றது. ஒரு கட்டளைக்கு ரூபா. 40 செலவேற்படுவதுடன் இருப்புப் பேணல் கிரயமானது அலகு விலையின் 10% மாகும். பொருள் அலகொன்றிற்கான கிரயம் ரூபா. 50 ஆகும். பின்வரும் விடயங்களைக் கணிக்கவும்.

(i) பொருளாதாரக் கட்டளையின் பெறுமதி

....

(ii) வருடத்தில் கட்டளை இட வேண்டிய தடவைகளின் எண்ணிக்கை?

....

[பக். 11 ஐப் பார்க்க

49. நலன்புரிச் சங்கமொன்றின் சொத்துக்கள், பொறுப்புக்கள் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

உருப்படிகள்	**2014.03.31 இல் ரூபா**	**2013.03.31 இல் ரூபா**
காசு	12 000	10 000
வங்கி	22 000	20 000
எழுதுகருவிப் பொருட்களின் இருப்பு	5 000	3 000
பொறுப்புக்கள்	3 000	2 000

(அ) 2014.03.31 முடிவடையும் வருடத்திற்கான மேலதிகம்/ பற்றாக்குறை = ரூபா. ....

(ஆ) 2014.03.31 ல் திரண்ட நிதி ரூபா. ....

50. அப்பியாசப் புத்தகங்களை உற்பத்தி செய்யும் நிறுவனமொன்றின் பின்வரும் கிரய உருப்படிகளை வகைப்படுத்தப்படுவது முதற்கிரயத்திலா? உற்பத்தி மேந்தலைக் கிரயத்திலா என்பதைக் குறிப்பிடவும்

கிரய உருப்படிகள்	கிரய வகைப்படுத்தல்
(1) அப்பியாசப் புத்தகத்திற்கான தாள்	....
(2) உற்பத்திக் கூலி	....
(3) தொழிற்சாலை வாடகை	....
(4) இயந்திரத் தேய்வு	....

***

க.பொ.த. (உ.தரம்) உதவிக் கருத்தரங்கு 2014

கணக்கீடு II | **மூன்று மணித்தியாலம்**

கவனிக்கவும்

* **முதலாம் இரண்டாம்** வினா உட்பட **ஆறு** வினாக்களுக்கு விடையளிக்கவும்

1. வரையறுக்கப்பட்ட காஞ்சனா வணிகத்தின் 2014.03.31 ல் முடிவடைந்த வருடத்திற்கான உரிமை மாற்றல் கூற்றும் அத்திகதியில் உள்ளவாறான நிதி நிலமைக் கூற்றும் கீழே தரப்பட்டுள்ளன.

2014.03.31 திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான உரிமை மாற்றல் கூற்று (ரூபா. '000)

விபரம்	சாதாரண பங்குகள்	மீட்கத்தகாத முன் பங்குகள்	மீள் மதிப்பீட்டு ஒதுக்கம்	பொது ஒதுக்கம்	நிறுத்தி வைத்த உழைப்பு	மொத்தம்
மீதி 2013.04.01	2 500	1 500	1 000	800	450	6 250
ஒதுக்கத்தை மூலதனமாக்கல்	800	-	(600)	(200)	-	-
பொது ஒதுக்கத்திற்கு மாற்றியது	-	-	-	200	(200)	-
மொத்தமாகச் சேர்க்கப்பட்ட வருமானம்	-	-	400	-	580	980
பங்கிலாபம் - முன்னுரிமைப் பங்குகள்	-	-	-	-	(80)	(80)
சாதாரண பங்குகள்	-	-	-	-	(100)	(100)
மீதி 2014.03.31	3 300	1 500	800	800	650	7 050

2014.03.31 இல் உள்ளவாறான நிதி நிலமைக் கூற்று (ரூ. '000)

நடைமுறையல்லாச் சொத்துக்கள்			
ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் (குறிப்பு)			6 240
15% நிலையான வைப்பு			1 200
நடைமுறைச் சொத்துக்கள்			
இருப்புக்கள்		175	
கடன்பட்டோர்	300		
ஐயக் கடனுக்கான ஏற்பாடு	(15)	285	
குத்தகை தவணைக்கட்டணக் கணக்கு		125	
காசும் காசுக்கு சமனானவைகளும்		1 125	1 710
மொத்தச் சொத்துக்கள்			9 150
கூறப்பட்ட மூலதனம்			
சாதாரண பங்குகள்		3 300	
மீட்கத்தகாத முன்னுரிமைப் பங்குகள்		1 500	4 800
ஒதுக்கங்கள்			
மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்		800	
பொது ஒதுக்கம்		800	
நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்பு		650	2 250
நடைமுறையல்லாப் பொறுப்புக்கள்			
12% நீண்டகாலக் கடன்			1 000
நடைமுறைப் பொறுப்புக்கள்			
கடன் கொடுத்தோர்			
பங்கு வழங்கல்		400	
செலுத்த வேண்டிய வருமான வரி		450	
வங்கி மேலதிகப் பற்று		65	
மொத்த உரிமைகளும் பொறுப்புக்களும்		185	1 100
			9 150

[பக். 2 ஐப் பார்க்க

குறிப்பு :

ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் **(ரூ. '000)**

சொத்துக்கள்	கிரயம் / மீள்மதிப்பீட்டுப் பெறுமதி	திரண்ட பெறுமானத் தேய்வு	தேறிய பெறுமதி
காணி	4 400	-	4 400
கட்டடம்	1 600	600	1 000
காரியாலய உபகரணம்	1 800	960	840
	7 800	1 560	6 240

2014.03.31 இல் முடிடைந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படவில்லை என்பது கணக்காய்வின் போது தெரியவந்தது.

(i) கம்பனியானது 2013.03.31 இல் ஒதுக்கிய வருமான வரி ரூபா. 65 000 ஆக இருந்தது. நடப்பாண்டிற்கு மதிப்பிடப்பட்ட வருமான வரி ரூபா. 410 000 ஆகும். 2013.03.31 இல் முடிவடையும் வருடத்திற்கு வருமான வரித்திணைக்களத்துடன் இணங்கப்பட்ட ரூபா. 75 000 யும் உள்ளடக்கியதாக வருடத்தினுள் செலுத்தப்பட்ட வருமான வரி ரூபா. 285 000ஆகும்.

(ii) 2013.04.01 இல் காணி ரூபா. 4 400 000 இற்கும் கட்டடம் ரூபா. 2 000 000 இற்கும் மீள்மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. காணியின் மீள் மதிப்பீட்டுப் பெறுமானம் மாத்திரம் நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்பட்டுள்ளதுடன் கட்டடமானது 4 வருடங்களிற்கு முன் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு அதன் நட்டமான ரூபா. 200 000 வருமானத்திற்கெதிராக பதிவழிக்கப்பட்டுள்ளது. வருடத்தினுள் மேற்கொள்ளப்பட்ட கட்டட மீள்மதிப்பீட்டுப் பெறுமானம் பதிவு செய்யப்படவில்லை. கட்டடமானது நேர்கோட்டு முறையில் கிரயத்தில் வருடாந்தம் 20% த்தில் பெறுமானத்தேய்வு செய்யப்படுகிறது.

(iii) 2013.04.01 இல் ரூபா. 400 000 கிரயத்தின் அடிப்படையில் நியாயமான விலைகொண்ட இயந்திரமொன்று குத்தகை அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. ஆரம்பக் கொடுப்பனவின்றி ரூபா. 125 000 வருடாந்த தவணைக் கட்டணத்தின் 4 சமமான வருடங்களில் குத்தகைக் கடன் செலுத்தப்படல் வேண்டும். வருடாந்தக் குத்தகை வட்டிக்கொடுப்பனவு பின்வருமாறு

ஆண்டு	வட்டி
2013/14	ரூபா. 40 000
2014/15	ரூபா. 30 000
2015/16	ரூபா. 20 000
2016/17	ரூபா. 10 000

2014.03.31 ம் திகதியில் இவ்வியந்திரத்திற்குரிய முதல் தவணைக்கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது. இத்தொகையானது குத்தகை தவணைக் கட்டணக் கணக்கில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இக்கொடுக்கல் வாங்கல் தொடர்பில் வேறு எப்பதிவுகளும் மேற்கொள்ளப்படவில்லை. இயந்திரத்தின் கிரயத்தின் மீது வருடாந்தம் 15% ம் பெறுமானத் தேய்வு மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(iv) 2014.03.31 இல் 40 000 பெறுமதியான கடன்பட்டோர் ஒருவர் 2014.04.20 இல் முறிவடைந்தார் எனும் தகவல் உறுதி செய்யப்பட்டுள்ளது. வருட இறுதியிலுள்ள கடன்பட்டோர் மீதியின் அடிப்படையில் ஐயக்கடனுக்கு 5%ம் ஏற்பாடு செய்தல் கம்பனியின் கொள்கையாகும்.

(v) கம்பனி 2014.02.28 ல் சாதாரண பங்கு வழங்கலை மேற்கொண்டுள்ளது. பெற்ற காசிலிருந்து பங்கு வழங்களுக்காக ஏற்பட்ட செலவான ரூபா. 50 000 குறைக்கப்பட்டு மீதி பங்கு வழங்கல் கணக்கில் செலவு வைக்கப்பட்டது தவிர்ந்த வேறு எப்பதிவுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

(vi) 2014.03.31 இல் இருப்பின் தேறிய தேறத்தக்க பெறுமதி ரூபா. 160 000 ஆக இருந்தது.

(vii) வங்கி மேலதிகப் பற்றுக்கு வணிகத்தின் ரூபா. 100 000 பெறுமதியான சரக்கிருப்புக்கள் பிணையாக வைக்கப்பட்டுள்ளன.

மேலதிகத்தகவல்கள்

(அ) 2014.03.31 இல் முடிவடையும் வருடத்திற்கான வருமானக் கூற்றினைத் தயாரிக்கும் போது பின்வரும் வருமானங்கள் செலவுகளில் மாத்திரமே கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

	(ரூ. '000)
கட்டடப் பெறுமானத் தேய்வு	320
காரியாலய உபகரணத் தேய்வு	280
கடன் வட்டி	100
வட்டி வருமானம்	150
பணிப்பாளர் கட்டணம்	210
வருமான வரி	285
ஏனைய விநியோகச் செலவுகள்	300
ஏனைய நிர்வாகச் செலவுகள்	450

[பக். 3 ஐப் பார்க்க

(ஆ) சாதாரண பங்கொன்றினதும் முன்னுரிமைப் பங்கொன்றினதும் விலை ரூபா. 10 ஆவதுடன் முன்னுரிமைப் பங்கொன்றிற்கான பங்கிலாபம் ரூபா. 1.20 ஆகும்.

வேண்டப்படுவது

(1) 2014.03.31 இல் முடிவடையும் வருடத்தில் இலாபத்தை சரியாகக் காட்டும் கூற்றொன்று
(2) 2014.03.31 இற்கான நிதிநிலைமைக் கூற்று
(3) 2014.03.31 இல் முடிவடையும் வருடத்திற்கான உரிமை மாற்றல் கூற்று
(4) கணக்கீட்டு நியமம் LKAS-2 இற்கேற்ப இருப்புத் தொடர்பிலான இரு வெளிப்படுத்தல்களைத் தருக.

(20 புள்ளிகள்)

2. (அ) இலாப நட்டத்தைச் சமமாகப் பகிரும் ஒப்பந்தத்தின் அடிப்படையில் நிசா, காயத்ரி எனும் பங்காளர்கள் நடாத்திச் செல்லும் பங்குடமை வணிகத்தில் 2013.04.01 இல் சாவித்திரியும் இணைத்துக்கொள்ளப்பட்டார். 2014.03.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான பங்குடமை வணிகத்தின் நடைமுறைக் கணக்கு பின்வருமாறு இருந்தது.

நடைமுறைக் கணக்கு **(ரூபா'000)**

	நிசா	காயத்திரி	சாவித்திரி		நிசா	காயத்திரி	சாவித்திரி
பற்று	200	220	140	மீ.கீ.கொ.வ	500	300	-
				சம்பளம்	-	-	175
				மூலதன வட்டி	100	80	-
மீதி கீ.கொ.செ	580	280	95	இலாபப் பங்கு	180	120	60
	780	500	235		780	500	235

மேலதிகத் தகவல்கள்

(i) சாவித்திரி பங்குடமையில் இணைந்து கொள்ளும் பொழுது அவரால் காசாக ரூபா. 550 000 கொண்டுவரப்பட்டதுடன் அதில் நன்மதிப்பான ரூபா. 50 000 உள்ளடக்கப்பட்டுள்ளது,

(ii) நன்மதிப்புத் தொடர்பான சீராக்கங்கள் பங்காளரின் மூலதனக்கணக்கினூடாகவே மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(iii) வருடாந்த மூலதன வட்டி 10% மாகும். ஆரம்ப மூலதன மீதியினடிப்படையிலேயே வட்டி கணிக்கப்பட்டுள்ளது.

(iv) 2014.01.01 ஆம் திகதியில் சாவித்திரி வணிகத்திற்கு வழங்கியுள்ள கடனின் பெறுமதி ரூபா. 400 000 ஆகும். வட்டி தொடர்பில் உடன்பாடில்லாமையினால் கடன் வட்டி பதிவு செய்யப்படவில்லை. இக்கடன் தொகையானது ரூபா. 5 000 வீதம் 80 தவணைகளில் செலுத்தி முடிக்கப்படல் வேண்டும். 2014.03.31 ஆம் திகதியாகும் பொழுது முதல் மூன்று தவணைகள் செலுத்தப்பட்டுள்ளன.

(v) நிதியாண்டினுள் நிசா, காயத்திரி, சாவித்திரி ஆகியோரின் பொருட் பற்றுதல்கள் முறையே ரூபா. 30 000, ரூபா. 35 000, ரூபா. 20 000 தொடர்பில் பதிவுகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

வேண்டப்படுவது

(1) 2014.03.31ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான சரியான இலாபப் பகிர்வினைக் காட்டும் கூற்றொன்று

(2) மேலதிகத் தகவல்களைக் கருத்திற் கொண்டு 2014.03.31 ல் முடிவடைந்த வருடத்திற்கான நடைமுறைக் கணக்கு

(3) 2014.03.31 ல் முடிவடையும் வருடத்திற்கான மூலதனக் கணக்கு

(4) 2014.03.31 திகதியில் உள்ளவாறான உரிமைகள், பொறுப்புக்கள் தொடர்பான நிதி நிலமைக் கூற்றின் பொழிப்பு **(20 புள்ளிகள்)**

(ஆ) மரப்பலகைகளினால் பூச்சாடி வகைகளை உற்பத்தி செய்யும் சந்திரிக்கா வணிகத்தின் 2014.03.31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்குரிய தகவல்களிற் சில பின்வருமாறு

	2014.01.01 (ரூபா. '000)	2014.03.31 (ரூபா. '000)
(i) **<u>சொத்துக்கள்</u>**		
இயந்திர உபகரணங்கள்	100 000	90 000
இருப்புக்கள் (பலகை)	10 000	8 800
(ii) **<u>காசுக் கொடுப்பனவுகள்</u>**		
பலகைக் கொள்வனவு	66 000	
உற்பத்திப் பொது மேந்தலைக் கிரயம்	15 800	

[பக். 4 ஐப் பார்க்க

(iii) ஒரு பூச்சாடியினை உற்பத்தி செய்வதற்காக 1/5 சதுர அடிப் பலகை தேவைப்படுகின்றது. காலாண்டு தொடக்கத்தில் ரூபா. 200 வீதம் கொள்வனவு செய்யப்பட்ட பலகைகளில் 50 சதுர அடிப் பலகை இருப்பாகக் காணப்பட்டதுடன் அக்காலாண்டு காலப்பகுதியினுள் ஒரு சதுர அடிப்பலகை ரூபா. 220 வீதம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

(iv) வணிகத்தின் மூலப் பொருள் முடிவுப் பொருள் என்பன முதல் உள் முதல் வெளி (FIFO) முறையிலேயே வழங்கப்படுகின்றது.

(v) ஒரு பூச்சாடியினை உற்பத்தி செய்து முடிப்பதற்கு ஒரு ஊழியருக்கு ரூபா. 40 வழங்கப்படும்.

(vi) காலாண்டு தொடக்கத்தில் பூர்த்தியாக்கப்பட்ட பூச்சாடிகள் 200 காணப்பட்டதுடன், அக்காலாண்டின் இறுதியில் 100 பூச்சாடிகள் காணப்பட்டன.

(vii) காலாண்டினுள் இயந்திர உபகரணங்களின் கொள்வனவுகள் அல்லது விற்பனைகள் எதுவும் இடம்பெறவில்லை

(viii)பூச்சாடியொன்றின் விற்பனை விலை ரூபா. 150 ஆகும்.

வேண்டப்படுவது

(1) 2014.03.31 ஆம் திகதியில் முடிவடைந்த காலாண்டிற்குரிய உற்பத்திக் கணக்கு
(2) 2014.03.31 இல் முடிவடையும் இறுதிக் காலாண்டிற்கான பூச்சாடிகளின் விற்பனை வருமானம் (10 **புள்ளிகள்**)
(20 **புள்ளிகள்**)

3.(அ) 2014.01.01 ஆம் திகதியில் சக்கரவர்த்தி வணிகத்தின் சொத்து, பொறுப்புக்கள் பின்வருமாறு

	(ரூபா.' 000)
மோட்டார் வாகனம்	1 500
கடன்பட்டோர்	270
தளபாடங்களும் பொருத்துக்களும்	95
இருப்புக்கள்	43
வங்கி	137
கடன்கொடுத்தோர்	350
அட்டுறுச் செயற்பாட்டுச் செலவுகள்	5

2014 ஜனவரி மாதத்தினுள் நிறுவனத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு

கொடுக்கல் வாங்கல்களின் இலக்கம்	திகதி	கொடுக்கல் வாங்கல்கள்
(1)	2014.01.05	ரூபா. 40 000 பெறுமதியான தளபாடங்களும் பொருத்துக்களும் கொள்வனவு செய்யப்பட்டன.
(2)	2014.01.08	சக்கரவர்த்தியின் நிலையான வைப்புப் பணம் ரூபா. 125 000 ம் வணிகத்தில் இடப்பட்டது.
(3)	2014.01.15	ரூபா.90 000 பெறுமதியான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டதுடன் அதற்காகக் காசோலையொன்று வழங்கப்பட்டது.
(4)	2014.01.17	ரூபா.65 000 கிரயமுள்ள பொருட்கள் ரூபா 80 000 விற்பனை செய்யப்பட்டது. இதற்காக ரூபா. 50 000 பெறுமானமுள்ள காசோலை கிடைக்கப்பெற்றது. எஞ்சிய பெறுமானம் கடனாகக் கருதப்பட்டது.
(5)	2014.01.20	கடன்பட்டோரிடமிருந்து ரூபா. 265 000 காசு கிடைக்கப்பெற்றதுடன் ரூபா. 5 000 அறவிட முடியாக் கடனாகப் பதிவழிக்கப்பட்டது.
(6)	2014.01.23	ஆரம்பத்தில் அட்டுறுவாகக் காணப்பட்ட செயற்பாட்டுச் செலவுகள் உட்பட செலவுகளுக்காக ரூபா.35 000 காசு செலுத்தப்பட்டது.
(7)	2014.01.27	சக்கரவர்த்தி தனது தனிப்பட்ட தேவைகருதி ரூபா.8 000 கிரயம் கொண்ட பொருட்களை நிறுவனத்திலிருந்து பற்றியுள்ளார்.
(8)	2014.01.30	மோட்டார் வாகனத்திற்கு நேர்கோட்டு முறையில் வருடாந்தம் கிரயத்தில் 20% பெறுமானத் தேய்விடப்பட்டது.

[பக். 5 ஐப் பார்க்க

வேண்டப்படுவது

(1) மேற்காட்டிய தொடக்க மீதிகள் உட்பட அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களிலும் ஏற்பட்ட தாக்கத்தினை (பெறுமானங்களுடன்) கணக்கீட்டுச் சமன்பாட்டினைப் பயன்படுத்திக் காட்டவும். பெறுமானங்களின் முன்னால் அதிகரிப்பு ஏற்பாடுமாயின் (+) குறைவு ஏற்பாடுமாயின் (-) அடையாளத்தினை இடவும்.
(இதற்காகப் பின்வரும் மாதிரி அமைப்பைப் பயன்படுத்தவும்)

கொடுக்கல் வாங்கல்களின் இலக்கம்	சொத்துக்கள்					பொறுப்புக்கள்	உரிமை
	மோட்டார் வாகனம்	தளபாடங்களும் பொருத்துக்களும்	இருப்பு	கடன்பட்டோர்	வங்கி		

(2) தேறிய சொத்துக்களை அடிப்படையாகக் கொண்டு 2014 ஜனவரி மாதத்திற்கான தேறிய இலாபத்தை அல்லது நட்டத்தைக் கணிப்படவும். **(புள்ளிகள்** 10)

(ஆ) பிரசாந்த் வணிகத்தின் 2014.03.31 தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதியின் வரவுப் பக்கமானது செலவுப் பக்கத்தை விட ரூபா. 16 200 த்தினால் கூடுதலாகக் காட்டப்பட்டுள்ளமையை அறியக் கூடியதாக இருந்தது. பின்னர் பின்வரும் வழுக்கள் இடம் பெற்றுள்ளமை தெரியவந்தது. (வணிகம் கட்டுப்பாட்டுக் கணக்கைப் பேணுவதில்லை.)

(i) செலுத்தப்பட்ட ரூபா. 6 000 த்திற்கான விளம்பரக் கட்டணமானது அக்கணக்கில் பதிவு செய்யப்படவில்லை.

(ii) காப்புறுதிக் கட்டணக் கணக்கின் மீதியான ரூபா. 3 200 பரீட்சை மீதிக்குக் கொண்டு செல்லப்படவில்லை.

(iii) மோட்டார் வாகனப் பழுது பார்த்தல் செலவான ரூபா. 10 000 மோட்டார் வாகனக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

(iv) ரூபா. 2 400 பெறுமதியான வெளித்திரும்பல்கள், வெளித்திரும்பல் நாளேட்டில் இருமுறை பதிவு செய்யப்பட்டுள்ளது.

(v) பெற்ற தரகு ரூபா. 1 000 மானது கொடுத்த தரகுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

(vi) விற்பனை நாளேட்டில் கூட்டுத்தொகையானது ரூபா 9 000 த்தால் கூட்டிக் கணிப்பிடப்பட்டுள்ளது.

(புள்ளிகள் 05)

வேண்டப்படுவது

(1) வழுக்களைத் திருத்துவதற்கான பொதுக் குறிப்பேட்டுப் பதிவுகள்

(2) தொங்கற் கணக்கு **(மொத்தப் புள்ளிகள்** 15)

4. (அ) 2014.03.01 ஆம் திகதியன்று கீதிகா வணிகத்தின் கடன்கொடுத்தோர் பேரேட்டு மீதிகள் பின்வருமாறு தரப்பட்டுள்ளன.

	(ரூபா.' 000)
அஜித்	25 000
விஜே	44 000
லைலா	12 000
மொத்தம்	81 000

2014 மாதத்தினுள் கடன் கொடுத்தோர்களுடன் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் சுருக்கம் பின்வருமாறு

கடன்கொடுத்தோர்	கொள்வனவு (ரூபா.)	வெளித் திரும்பல் (ரூபா.)	கொடுப்பனவுகள் (ரூபா.)	பெற்ற கழிவுகள் (ரூபா.)
அஜித்	160 000	-	130 000	6 000
விஜே	300 000	4 000	300 000	-
லைலா	120 000	-	120 000	2 000
எட்வட்	50 000	-	16 000	-
மொத்தம்	630 000	4 000	566 000	8 000

[பக். 6 ஐப் பார்க்க

2014 மார்ச் 01 ஆம் திகதியன்று கடன் கொடுத்தோர் பேரேட்டு மீதியின் கூட்டுத்தொகையானது கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியுடன் இணங்கியிருந்தது. 2014 மார்ச் 31 ஆம் திகதியன்று கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியானது கடன்கொடுத்தோர் பேரேட்டு மீதிகளின் கூட்டுத்தொகையுடன் இணங்கவில்லை. இவ்வித்தியாசத்திற்கான காரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(i) அஜித்திடமிருந்து கிடைக்கப்பெற்ற ரூபா. 3 000 கழிவானது கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு பெற்ற கழிவுக் கணக்கில் செலவு வைக்கப்பட்டது தவிர்ந்த வேறு எவ்விதப் பதிவுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

(ii) விஜேக்கு அனுப்பப்பட்ட ரூபா. 4 000 பெறுமதியான வரவுத்தாள் அவரது கணக்கில் பதிவு செய்யப்படவில்லை.

(iii) ரூபா. 20 000 பெறுமதியான உடன் காசு விற்பனை கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் செலவு வைக்கப்பட்டுள்ளது.

(iv) 2014 மார்ச் 28 ஆம் திகதியில் மூர்த்தியிடமிருந்து கடனுக்குப் பெற்ற பொருட்களுக்குரிய ரூபா. 12 000 பெறுமதியான கொள்வனவுப் பட்டியலானது கொள்வனவு நாளேட்டில் பதிவு செய்யப்படவில்லை.

(iv) கொள்வனவு நாளேட்டின் மொததம் ரூபா. 603 000 ஆக கட்டுப்பாட்டுக் கணக்கில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

வேண்டப்படுவது

(1) மேற்குறிப்பிட்ட தகவல்களைச் சீராக்க முன்னர் 2014 மார்ச் மாதத்திற்கான கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு

(2) கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கின் சரியான மீதியுடன் கடன் கொடுத்தோர் பேரேட்டு மீதியின் கூட்டுத்தொகையினை இணங்கற் செய்வதற்கான கூற்று

(3) 2014.03.31 ஆம் திகதியன்று நிதிநிலமைக் கூற்றில் காட்டப்பட வேண்டிய கடன் கொடுத்தோர் மீதி

(புள்ளிகள் 10)

(ஆ) 2014 மார்ச் 31 ஆம் திகதியன்று வணிகமொன்றின் வங்கிக் கூற்றின் வரவு மீதி ரூபா 8000 காணப்பட்டது. அத்திகதியில் வணிகத்தின் வங்கிக் கூற்று மீதியுடன் வங்கிக் கணக்கு மீதியையும் ஒப்பிட்டபோது பின்வரும் தகவல்கள் வெளியாகின.

(i) வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 25000 பெறுமதியான காசோலையொன்று வசூலிக்கப்படவில்லை.

(ii) வழங்குனர் ஒருவருக்கு வழங்கப்பட்ட ரூபா.18000 பெறுமதியான காசோலையொன்று இதுவரையில் வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(iii) வங்கிக் கூற்றிற்கமைய வங்கிக் கட்டணமான ரூபா 500, காசோலைப் புத்தகக் கட்டணமான ரூபா 350 வங்கிக்கு வழங்கிய நிலையியற் கட்டளையின் அடிப்படையில் செலுத்திய காப்புறுதிக் கட்டணம் ரூபா. 1400 என்பவை நிறுவனத்தின் வங்கிக் கணக்கில் பதிவு செய்யப்படவில்லை.

(iv) நிறுவன வாடகைக்காக வழங்கப்பட்ட ரூபா 15000 பெறுமதியான காசோலை மறுக்கப்பட்டுள்ளதுடன் அது தொடர்பான பதிவுகள் நிறுவனத்தின் வங்கிக் கணக்கில் பதிவு செய்யப்படவில்லை.

(புள்ளிகள் 05)

வேண்டப்படுவது

(1) 2014 மார்ச் மாதத்திற்கான வங்கிக் கணக்கிணக்கக் கூற்று

(2) சீராக்கப்படுவதற்கு முன்னர் 2014 மார்ச் 31 ஆம் திகதியிலுள்ளவாறான வங்கிக் கணக்கு மீதி

(மொத்தப்புள்ளிகள் 15)

5. (அ) வணிகமொன்றின் இயந்திரங்கள் தொடர்பான தகவல்களில் சில கீழே தரப்பட்டுள்ளன.

(i) 2010.04.01 ல் கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரத்தின் பெறுமதி ரூபா 90 000 ஆக இருந்ததுடன், 10 வருடங்களின் பின்னர் அதன் இழிவுப்பெறுமதி ரூபா. 10 000 ஆகவும் மதிப்பிடப்பட்டிருந்தது.

(ii) 2012.10.01 இல் மேற்குறிப்பிட்ட இயந்திரத்தின் வினைத்திறனை அதிகரிப்பதற்காக ரூபா 40000 பெறுமதியானபுதிய பகுதியொன்று அதற்கு பொருத்தப்பட்டது. அப்பொருத்துதல் காரணமாக இயந்திரத்தின் பயன்படு ஆயுற்காலம் அத்திகதியிலிருந்து எதிர்வரும் 10 வருடங்களாகுமெனவும் இழிவுப்பெறுமதியில் மாற்றமில்லை எனவும் மதிப்பிடப்பட்டது.

(iii) 2014.01.01 இல் மேற்குறிப்பிட்ட இயந்திரம் ரூபா. 120 000 பெறுமதியுடைய அதே போன்ற இயந்திரமொன்றுடன் மாற்றிக் கொள்ளப்பட்டது. இதற்காக பழைய இயந்திரத்துடன் மேலதிகமாக ரூபா. 20 000 செலுத்தவேண்டி ஏற்பட்டது.

(iv) புதிய இயந்திரத்தின் பயன்படு ஆயுற்காலம் 10 வருடங்களாகவும், இழிவுப்பெறுமதி அதற்கு இல்லையெனவும் மதிப்பிடப்பட்டது.

வேண்டப்படுவது

(1) இயந்திரப் பரிமாற்றம் தொடர்பிலான நாட்குறிப்புப் பதிவுகள்

(2) இயந்திரப் பரிமாற்றம்காரணமாக 2014.03.31 ல் முடிவடையும் வருடத்தில் இலாபத்தில் ஏற்படும் தாக்கத்தினைக் காட்டுக.

(புள்ளிகள் 07)

[பக். 7 ஐப் பார்க்க

(ஆ) கொடுக்கல் வாங்கல்களைப் பதிவுசெய்வதற்கு இரட்டைப் பதிவு முறையினைப் பின்பற்றாத சதாத் வணிகத்தின் 2014.06.30 ம் திகதிக்கு பின்வரும் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன.

(i)

சொத்துக்களும் பொறுப்புக்களும்	**2013.06.30 ஆம் திகதியில்** (ரூ.)	**2014.06.30 ஆம் திகதியில்** (ரூ.)
காசு	80 000	35 000
சரக்கிருப்பு	35 000	48 000
கடன்பட்டோர்	?	50 000
கடன் கொடுத்தோர்	30 000	14 000
ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் (கிரயத்தில்)	150 000	?

(ii) 2014.06.30 இல் முடிவடையும் வருடத்தினுள் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களில் சில பின்வருமாறு.

	(ரூ.)
கடன்பட்டோரிடமிருந்து பெற்ற காசு	223 000
கொடுத்த கழிவு	7 000
செலுத்திய சம்பளம்	19 000
ஏனைய செயற்பாட்டுச் செலவுகள்	18 000
காசுப்பற்று	5 000
கடன் கொடுத்தோருக்கு செலுத்திய காசு	280 000
பெற்ற கழிவு	4 000

(iii) **மேலதிக தகவல்கள்**

(i) விற்பனையில் 20% இலாபம் பெறக்கூடியவாறு காசுக்கும், கடனுக்கும் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. உடன் காசு விற்பனை, கடன்பட்டோரிடமிருந்து கிடைத்த காசு தவிர்ந்த வேறு காசுப் பெறுவனவுகள் இல்லை.

(ii) 2014 ஜூன் மாதச் சம்பளம் ரூபா 8 000 செலுத்தப்படவில்லை.

(iii) 2014.06.30 இல் முடிவடையும் வருடத்திலிருந்து கடன்பட்டோரில் 5% த்தை ஐயக் கடனாக ஏற்பாடு செய்வதற்கும், ஆதனம் பொறி மற்றும் உபகரணத்திற்கு கிரயத்தில் 10% ம் பெறுமானத் தேய்வு செய்வதற்கும் தீர்மானிப்பப்பட்டுள்ளது.

வேண்டப்படுவது

(1) 2014.06.30 இல் முடிவடையும் வருடத்திற்கான வருமானக் கூற்று

(2) 2014.06.30 இல் உள்ளவாறான நிலைமைக் கூற்று

(புள்ளிகள் 08)

(மொத்தப் புள்ளிகள் 15)

6. **(அ)** விளையாட்டரங்கொன்றினை நடாத்திச் செல்லும் "சன்" இளைஞர் கழகத்தின் 2013.03.31 இல் சொத்துக்களும் பொறுப்புக்களும் பின்வருமாறு,

	(ரூ'000)	**(ரூ'000)**
நடைமுறையல்லாச் சொத்துக்கள்:		
விளையாட்டரங்கு	500	
உடற்பயிற்சி உபகரணங்கள்	800	1 300
நடைமுறைச் சொத்துக்கள்:		
நிலுவை சந்தாக் கட்டணம்	50	
வங்கி மீதி	125	
காசு	40	215
நடைமுறையல்லாப் பொறுப்புக்கள்		
ஆயுள் சந்தா	500	
உடற்பயிற்சி உபகரண நிதி	300	800
நடைமுறைப் பொறுப்பு:		
முற்பணச் சந்தாக் கட்டணம்	125	
முற்பணங்கள் (உடற்பயிற்சிக்கான)	40	165

2014.03.31இல் முடிவடையும் வருடத்திற்கான தகவல்கள் பின்வருமாறு

(i) சகல பெறுவனவுகளும் கொடுப்பனவுகளும் காசு மூலம் மேற் கொள்ளப்படுகின்றது.

(ii) வருட சந்தாக் கட்டணத்தொகை ரூபா 5 000 என்பதுடன், அங்கத்தவர்கள் 100 பேர் காணப்படுகின்றனர். அத்துடன் ரூபா 10 000 வீதம் ஆயுள் சந்தா செலுத்திய 50 அங்கத்தவர்களும் உள்ளனர். ஆயுள் சந்தாவில் 10% த்தை வருடாந்த சந்தா வருமானமாகக் கருதுவது நிறுவனத்தின் கொள்கையாகும்.

(iii) வருடத்தினுள் கிடைக்கப்பெற்ற சந்தாக் கட்டணம் ரூபா. 425 000 ஆகும். இத்தொகையினுள் கடந்த வருட நிலுவை சந்தாக் கட்டணப் பெறுவனவும், எதிர்வரும் வருடத்திற்கு சந்தாக் கட்டணம் செலுத்திய 20 அங்கத்தவர்களினது சந்தாத் தொகையும் உள்ளடங்கியுள்ளது. வருட இறுதியில் 20 அங்கத்தவர்கள் இவ்வருடத்திற்கான அங்கத்துவ சந்தாக்கட்டணத்தை செலுத்தியிருக்கவில்லை.

(iv) அங்கத்தவர் தவிர்ந்த வெளி நபர்கள் நாளாந்தக் கட்டணம் ரூபா. 200 செலுத்தி உடற்பயிற்சி பெறுவதற்கான வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. 52 நாட்களினுள் 50 பேர் உடற்பயிற்சி வசதிகளை பெற்றுக்கொண்டு ரூ. 550 000 செலுத்தியுள்ளதுடன், மேலதிகமாக கிடைக்கப்பெற்ற தொகையானது எதிர்வரும் வருடத்திற்கான முற்பணத் தொகையாகும்.

(v) உடற்பயிற்சி உபகரணங்களுக்கு பொறுப்பாக இருக்கும் ஊழியருக்கு மாதாந்தம் சம்பளமாக ரூபா. 10 000 செலுத்தப்படுகின்றது.

(vi) வருடத்தினுள் விளம்பரத்திற்காக ரூபா 80 000 மும், ஏனைய செலவுகளுக்காக ரூபா 250 000 மும் செலுத்தப்பட்டுள்ளது.

(vii) விளையாட்டரங்கு, உடற்பயிற்சி உபகரணங்கள் வருடாந்தம் முறையே 5% ம், 20% தில் ஒடுங்கு பாக முறையில் தேய்விடப்படல் வேண்டும்.

(viii) விளையாட்டரங்கு அமைந்துள்ள கட்டடத்தின் ஒரு பகுதி மேசைப்பந்து விளையாட்டிற்காக வெளி நபரொருவருக்கு மாதாந்தம் ரூபா. 10 000 திற்கு 2013.04.01 இல் வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளது. அவர் 18 மாதங்களிற்கான வாடகையை செலுத்தியுள்ளார்.

(ix) வருட இறுதியில் ரூபா 50 000 த்தை மீதியாக வைத்துக்கொண்டு எஞ்சிய சகல காசும் வங்கியிலிடப்பட்டது.

(x) வருடத்தினுள் உபகரணப் பராமரிப்புக்காக ரூபா 75 000 செலவிடப்பட்டுள்ளது.

வேண்டப்படுவது

(1) 2013.03.31 ஆந் திகதிக்கான திரண்ட நிதிக்கணக்கு
(2) 2014.03.31 இல் முடிவடையும் வருடத்திற்கான வருமான செலவுக் கணக்கு
(3) 2014.03.31 உள்ளவாரான நிதி நிலமைக் கூற்று

(புள்ளிகள் 10)

(ஆ) நடமாடும் வானொன்றைப் பயன்படுத்தி சிறுவர்களுக்கான உடைகளை விநியோகிக்கும் நடமாடும் வணிகமொன்றை ஆரம்பிப்பதற்கு சித்தீக் எண்ணுகின்றார். அச்செயற்பாட்டிற்காக மதிப்பிடப்பட்ட மாதாந்த செலவுகள் பின்வருமாறு. மாதத்திற்கு 25 நாட்கள் வணிக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு பின்வரும் செலவுகளை ஏற்க வேண்டியுள்ளது.

	(ரூ)
வானொன்றினை வாடகைக்கு எடுத்தல் (ஒரு நாளைக்கு ரூபா 5 000)	125 000
மேலதிக செலவுகள் (ஒரு நாளைக்கு ரூபா 1 000)	25 000
உதவியாளர் சம்பளம் (ஒரு நாளைக்கு ரூபா 500)	12 500

சிறுவர் உடையொன்றினை ரூபா 300 இற்கு கொள்வனவு செய்து ரூபா 800 இற்கு விற்பனை செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

வேண்டப்படுவது

(1) மாதாந்த கிரயத்தினை பெற்றுக்கொள்வதற்கு விற்பனை செய்யவேண்டிய **சிறுவர் உடைத்தொகுதியின்** எண்ணிக்கை.

(2) மாதத்தில் ரூபா 150 000இத்தினை இலாபமாக பெற எதிர்பார்ப்பாராயின் விற்பனை செய்யவேண்டிய **சிறுவர் உடைத்தொகுயின்** எண்ணிகை.

(புள்ளிகள் 05)

(மொத்தப் புள்ளிகள் 15)

[பக். 9 ஐப் பார்க்க

7. **(அ)** சியான் கம்பனியானது பின்வரும் இரு முதலீட்டு வாய்ப்புக்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இரு இயந்திரங்களினதும் பயன்படு ஆயுற்காலம் 4 வருடங்களாகும். இவற்றில் ஒரு இயந்திரத்தை மாத்திரம் தெரிவு செய்தல் வேண்டும்.

	இயந்திரம் A (ரூ.)	**இயந்திரம் B (ரூ.)**
ஆரம்ப முதலீடு	250 000	250 000
1 ஆம் வருட இலாபம்	85 000	65 000
2 ஆம் வருட இலாபம்	50 000	45 000
3 ஆம் வருட இலாபம்	75 000	60 000
4 ஆம் வருட இலாபம் / நட்டம்	(32 000)	22 000
4 ஆம் வருட முடிவில் இழிவுப்பெறுமதி	50 000	50 000

சியான் கம்பனியின் எதிர்பார்ப்பு வருவாய் வீதம் 15% ஆகும்.

15% கழிவுக்காரணி

வருடம்	**1**	**2**	**3**	**4**
கழிவுக்காரணி	0.87	0.76	0.66	0.57

வேண்டப்படுவது

(1) கணக்கீட்டு வருவாய் வீதம் (சராசரி முதலீட்டினை அடிப்படையாகக் கொண்டு)

(2) முதலீடு திரும்பி வரும் காலம்

(3) தேறிய நிகழ்காலப் பெறுமதி

(4) மேலே (1), (2), (3) என்பவற்றிற்கேற்ப தெரிவு செய்யவேண்டிய பொருத்தமான முதலீட்டு சந்தர்ப்பத்தினை வெவ்வேறாகக் காட்டுக. (புள்ளிகள் 10)

(ஆ) உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள நிறுவனமொன்றின் P எனும் மூலப்பொருளின் 3 000 அலகுகள் 2014.03.01 ல் தொழிற்சாலையில் எஞ்சியிருந்தன. அந்நிறுவனத்தின் களஞ்சியப் பொறுப்பாளர் பின்வரும் தகவல்களை முன்வைக்கின்றார்.

		அலகொன்றின் விலை (ரூ.)	**அலகுகள்**
2014.03.01	இல் களஞ்சியச்சாலையில் இருந்து இருப்பு	10	3 000
2014.03.05	இல் கொள்வனவு	12	15 000
2014.03.10	இல் தொழிற்சாலைக்கு விநியோகித்தல்		10 000
2014.03.20	இல் தொழிற்சாலையினால் திருப்பி அனுப்பட்டது (ரூபா 12 படி கொள்வனவு செய்தது)		1 000
2014.03.25	இல் கொள்வனவு	15	15 000
2014.03.28	03/25 கொள்வனவு செய்த இருப்பில் வழங்குநருக்கு திருப்பியனுப்பியது.		2 000

பின்வரும் மேலதிகத்தகவல்களும் வழங்கப்பட்டுள்ளன.

(i) 2014.03.31 தொழிற்சாலையில் எஞ்சியுள்ள இருப்பு1 200 அலகுகளாகும்.

(ii) நிறுவனம் இருப்புக்களை பெறுமதியிடுவதற்கு நிறையிடப்பட்ட சராசரி விலையிடல் முறையினைப் பின்பற்றுகின்றது.

(iii) வணிகத்தின் நாளொன்றிற்கான உச்ச நுகர்வு 800 அலகுகளாகும்

(iv) உச்ச கட்டளைக் காலம் 15 நாட்களாகும்.

வேண்டப்படுவது

(1) தொழிற்சாலையின் நாளொன்றிற்கான சராசரி நுகர்வு

(2) மறு கட்டளை மட்டம்

(3) மறுகட்டளை அளவு

(4) 2014.03.31 இல் இருப்பின் பெறுமதி

(புள்ளிகள் 05)

(மொத்தப் புள்ளிகள் 15)

***